Registered at the
G. P. O. Colombo
as A Newspaper.

திராவிடன்

[illegible]
[illegible]

THE DRAVIDAN.
A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

சந்தா விளம்பரம்.
தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரு 1-00
தபாற்செலவு உட்பட " " ரு 1 25
மலாய்நாட்டிற்கு " " ரு 2 50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது

விளம்பர விகிதம்.

1 கலம் முதன்முறை		ரூ. 4 50
¾ "	"	ரூ. 3 00
½ "	"	ரூ. 2 50
¼ "	"	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை
முற்காசு கட்டவேண்டும்

புத்தகம்—2. யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-விபவ ஹூ புரட்டாதிமீ ௧௨ (1928 செப்டெம்பர்மீ 16) ஞாயிற்றுக்கிழமை. இலக்கம்—7.

உ

கடவுள் துணை.

அங்கிங்கெனுதபடியெங்கும்பிரகாசமா
 யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
 யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
 தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
 தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
 வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவோர்சித்தாகியின்பமாய்
 யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
 கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
 கருதியஞ்சலிசெய்குவாம்

ஒரு ஆண் வயிற்றில் குழந்தை.

பரீதுகூட்ஸ்கூல் ஹாஸ்டலில் ஒரு வேலைக்காரனிருந்தான். இருந்தாப்போல் அவனுடைய வயிற்றில் வலி ஏற்பட்டு இரண்டுநாள்வரை வலித்துக்கொண்டேயிருந்தது. மூன்றாவதுநாள் மாலையில் அவன் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றிருக்கின்றான். அவன் குழந்தையைக் கண்டு மிகப்பயந்து திகிலுற்றானும். குழந்தை சகல அங்க அடையாளங்களுடனே பிறந்திருந்தது. ஆனால் இரண்டுமணிநேரம் கழித்து இறந்துவிட்டதாம். இந்த வேலைக்காரனுக்கு சென்ற ஆண்டிலும் இதேமாதத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவைகள் பெரும் விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது.

250 வயசான கிழவர் பதினான்குமுறை விவாகஞ் செய்தனராம்.

சீனவில் கெய்சின் என்னும் கிராமத்தில் லிசிங்கியூன் என்னும் பெயர்கொண்ட 250 வயதான கிழவரொருவரிருக்கிறாராம். அவர் இன்னும் உடலுறுதியுடனிருக்கிறாராம். அவர் மனத்தை அமைதியுடன் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார். ஆமையைப்போல உட்காரவேண்டுமென்றும், மாடப்புறாவைப்போல நடக்கவேண்டுமென்றும், நாயைப்போல நடக்கவேண்டுமென்றும் கூறுகிறார் அவர் ஐம்பது வயதுடைய ஆண்பிள்ளைபோலவேயிருக்கிறார். அவர் பதினான்குமுறை விவாகஞ்செய்து 180 பிள்ளைபேரன்களுடன் இருக்கிறார் அவர் நாளாவீதம் நாற்பதுமைல்வீதம் நடக்கின்றனராம். கண்பார்வை கூர்மையாக இருக்கிறதாம்.

அதிசய கடிகாரம்

ஜெர்மனிநாட்டைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானப்புலவரொருவர் உலகம் முழுவதிற்கும் ஒரேசமயத்தில் காலமறிவிக்கும் கடிகாரமொன்றைச் செய்துகொண்டிருக்கிறாராம். இக்கடிகாரத்தை ஏதேனுமோர் உயர்ந்தஇடத்தில்வைத்து அதனுடைய டிக் டிக் சத்தம் ரேடியோ மூலமாக உலகத்தின் எப்பகுதியிலும் கேட்கும்படி செய்யப்படுமாம். அவ்வாறே மணியடிக்குஞ் சத்தமும் கேட்குமாறு செய்யப்படுமாம்.

புலால் உண்ணும் செடி.

தென் ஆபிரிக்கா ஆஸ்திரேலியா வட அமெரிக்கா முதலிய இடங்களிற் புலாலுண்ணும் செடிகள் இருக்கின்றனவாம். இவைகள் மிகவும் தந்திரமுள்ளன. சாதனத்தினால் பூச்சிகளையும் சிறு பறவைகளையும் பிடித்துத் தின்கின்றனவாம் "பென்டிய" என்னும் செடியின் இலையின் சிவப்புநிறமான நீண்ட குழாய்கள் போன்ற தண்டுகள் அமைந்திருக்கின்றன. இவை எல்லாம் இலையின் அடிப்புறத்தில் சேருமிடத்தில் பனித்துளிபோற் காணப்படும் பசைபோன்ற ஒருவகைப் பொருள் இருக்கும். தாகங்கொண்ட பூச்சி ஒன்று இதைப் பனித்துளியினாற் கவரப்பட்டு அதில் வந்து உட்கார்ந்ததும் இலையின் கைகள் எல்லாம் அதன்மீது படிந்து அங்கிருந்து அது தப்பிப்போகாமல் பார்த்துக்கொள்கின்றன இதிலே மிகவும் அதிசயமென்னவென்றால், இலையின் கரங்கள் மிகவும் நுட்பமான உணர்ச்சி பொருந்தினவாயிருப்பதேயாகும் தின்னக்கூடிய உணவு எது; தகாதது எது என்று அவை தெரிந்துகொள்கின்றனவாம். ஓர் இறைச்சித்துண்டையோ வேகவைத்த முட்டையையோ அந்த இலையில் வைத்தால் மேற்படி கரங்கள் மெதுவாக வளைந்து வருகின்றன. அப்போது இலையின் விளிம்பும் சுருளத் தொடங்குகிறது. சில வினாடிகளுக்கெல்லாம் அவ்விறைச்சித் துண்டோ முட்டையோ முழுதும் மூடப்பட்டுவிடுகிறது. பின்னர் ஜீரணிக்கும் வேலை தொடங்குகிறது ஜீரணமாகி முடிந்ததும் இலை முன்போல் விரியத் தொடங்குகிறது கரங்களும் நேராக நிமிர்ந்துவிடுகின்றன. இறைச்சித்துண்டு காணப்படுவதில்லை அதற்குப் பதிலாக பனித்துளிபோன்ற பசையே காணப்படுகின்றது. எனவே அடுத்த இரைக்கு இப்போது வலைவிரித்தாகிவிட்டது. ஆனால் அதே இலையில் ஒரு சிறுகல்லை வைத்தால் ஒன்றும் நேரிடுவதில்லை சிறிது நேரத்திற்கெல்லாம் இலை நன்றாக விரிய அது கீழே விழுந்துவிடுகின்றதாம்

குருவிலிருந்து தீப்பந்துகள் விழுகின்றனவாம்.

சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களுக்குள் மிகவும் பெரிதான குரு என்னும் கிரகத்திலின்று, தீமலையினின்று கிளம்பும் தீப்பிழம்புபோன்ற பிரமாண்டமான தீப்பந்துகள் கிளம்பி வருவதாகப் பிரான்சு வானசாஸ்திரி ஒருவர் கூறுகின்றார் பூமியிலே சிற்சிலசமயங்களில் விழும் வால்நட்சத்திரங்களும் தீப்பந்துகளும் குருவிலிருந்து வருவனவேயாகுமாம.

கௌரவ பிரதிநிதிகளின் செலவு.

சனங்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளின் பிரயாணச் செலவுக்கென ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா விடப்பட்டது கௌரவப்பட்டம் பெற்றவர்களின் வரிசைச் சின்னங்களுக்காகவும் 22750 ரூபா வேண்டுமாம் 49 அங்கத்தவருக்கு இவ்வளவு செலவானால் எண்பது பேருக்கும் எவ்வளவு செலவு வருமோ? இவ்விதசெலவானால் என்னபலன வந்துமுடியுமோ? எண்ணெய்ச்செலவேயன்றிப் பிள்ளைவளர்ச்சியுண்டாகாமலும் போகக்கூடும்.

பள்ளிக்கூடங்களில் சாதிவித்தியாசத்திற்குத்தடை.

தென்னிந்தியாவில் எந்த மாணவரையாவது அவருடையசாதி அல்லது வகுப்புக் காரணமாக மாத்திரஞ் சேர்த்துக்கொள்ள மறுக்கும் பள்ளிக்கூடங்களுக்கு உதவி நன்கொடைப் பணம் கொடுக்கப்படமாட்டாதென்று அரசாட்சியார் ஒரு உத்தரவை வெளியிட்டிருக்கின்றனராம்.

திராவிடன் பத்திராதிபருக்கு.

ஐயா,

உதயதாரகை 23-ம் இலக்கத்தில் வெளிவந்த முப்புரிநூலோனின் கடிதத்திலிருந்து மேல்லோகப் பத்திரிகையின் ஆதீனகாரர் கத்தோலிக்க சுவாமியார் ஒருவரென அறியலானோம் முப்புரிநூலோனின் கடிதத்தினிடையே "குருமார் சில இடங்களில் போசன பான விஷயமாய் வைரொத்தபடி ஒழுகவேண்டியதற்குள்ள நியாயத்தை உனக்கெடுத்துச் சொன்னாலும் நீ விளங்கமாட்டாய்" என்னும் வசனத்தைச் சுவாமிகள் இடையிலே சேர்த்ததினால் கத்தோலிக்க குருமாரும் கத்தோலிக்கரும் சாதிக் கட்டுப்பாட்டைக் கடந்தவர்களென்று சொல்லமுடியாது. சாதிக் கட்டுப்பாடு வேண்டுமென்பது அவர்கள் கொள்கையாகும். அதற்கு உதாரணம் அனுட்டானத்தில் வருவதை இன்றும் பார்க்கலாம். சாதியை ஒழித்துவிடலாமெனக்கருதிச் சைவசமயத்தை விட்டுக் கத்தோலிக்க மதத்திற் புகுதல் 'தவித்த தண்டு நுணலைக் கௌவிய' கதைபோலாகும் உதயதாரகையில் வெளிவந்த விஷயத்தை நோக்குமிடத்து ஊழியசங்கத்துக்கும் திராவிடனுக்கும் மறைவிலிருந்து கயிறு முடுக்கிவிடுபவர் கத்தோலிக்கசுவாமியேயெனப் புலப்படாமலில்லை. குருவின் இலட்சணத்தைக்கொண்டே சீடரையும் அளக்கவேண்டிவரும் இதோ கடவுளைக் காட்டித்தருகிறோம் என்றதுபோல ஒரு மதத்தில் இருப்பவர்களை இன்னொரு மதத்துக்கு இழுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக வேலைசெய்து வருபவர்கள் தம் முயற்சிகளிற் செயமடைதற்பொருட்டு எம்முயற்சிதான் செய்யமாட்டார்கள்.

சற்பிரசாதம்.

மணித்திரள்.

பிள்ளை எழுதுகின்றார்.

பிரசவமென்றால் இக்காலம் பெண்களுக்கு யமன்போல் இருக்கிறது முற்காலம் ஆஸ்பத்திரிகளுமில்லை பிரசவம் வில்லங்கமாகவுமிருக்கவில்லை இக்காலப் பெண்கள் அலுவல் செய்வதில்லை சுகமான சீவியம் சாய்மனையிலிருந்து நாவல் படிப்பதும் சீட்டாடுவதுமே பொழுதுபோக்கு பெண்கள் உடம்பை ஆட்டி வேலைசெய்தால் பிரசவம் வில்லங்கமல்லவென முதியோர் கூறுகின்றனர்.

* * *

தாம்தாம் செய்துவரும் தொழில்களை விட்டுவிட்டால் உயர்ந்த சாதி என்று சனங்கள் கருத்து. தொழிலில் ஒன்றுமில்லை ஒழுக்கமே பிரதானம் பாவம் பழிக்குரிய தொழில்களை விட்டுவிடுவதே நல்லசாதி!

* * *

குடும்பி விட்டவர்களிலும் சிலுப்பா விட்டவர்களுக்கு மரியாதை கூட 'நியாயம்' சிலுப்பாவிட்டவர் இங்கிலீஷ் படித்தவரென்றும், சிலுப்பாவிடாதவர், தமிழ்மாத்திரம் படித்தவர் நாகரிகம் பிடிபடாதவரென்றும் சனங்களிடையே நினைக்கிறார்கள்.

* * *

யாழ்ப்பாணத்திற் காணப்படுஞ் சாதிநுட்பம் வேறெங்குங்கிடையாது ஒரு குடும்பத்திலேயே பலசாதிகள் ஒருவர் சமைத்ததில் மற்றவர் சாப்பிடுவதில்லை. இம்முறைப்படி பாராட்டுவர்கள் சமத்துவம் என்றால் என்ன முடிந்த அலுவலா என ஆலோசிக்கின்றனர்.

* * *

ஆலயங்கள் சாதனைக்கும் போதனைக்கும் உரியதாக இருக்கவேண்டும். அல்லது போதனைக்கு வேறு இடங்கள் தாபனமாகவேண்டும். அப்பொழுதுதான் போதனை மூலமாகச் சனங்களைத் திருத்துதல் கூடும். போதனை முறையே மற்றைய சமயங்களை இவ்வளவிற வொணர்த்தது.

* * *

மனிதனை மிருகங்கள் வகுப்பில் சேர்த்தால் இவனை சிரிக்கிற மிருகம் என்று வேற்றுமைப்படுத்தலாமென ஒருவர் கூறுகின்றார்.

* * *

நாகரிகமென்றால் என்ன? பெண்மணிகள் மயிரைக் கத்தரித்துக் கொள்ளுதலும் ரொயிலெட்பவுடர் செண்ட் பாவித்தலும் ஆங்கிலத்திற் சம்பாஷிப்பதும் ஸ்திரீ புருடர் ஒருவருடன் ஒருவர் கைகுலுக்குவதும், டெனிஸ் விளையாடுவதும் டிராமா அட்டபண்ணுவதும், மூக்குக்கண்ணாடி கொளுவிக்கொள்ளுவதும் சப்பாத்துக் கால்மேசு மாட்டிக்கொள்வதும், வெத்திலை, கொண்டாடுவதும் மேல்நாட்டார் போல இருக்கிறோமென நினைந்து நினைந்து ஆனந்திப்பதும் தானே.

* * *

யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கிலப் பள்ளிக்கூடங்களெவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் கல்விகற்று வருகின்றனர். ஆங்கிலம் கற்கிற எவருக்குதான் உத்தியோகம் இருக்கிறது? ஜூனியர் சீனியர் வாசித்துவிடவேணுமென்று ஊக்கமாகப் படித்துச் சித்திபெறாவிட்டால் இனி என்னசெய்யப் போகின்றோமென்னும் விசாரமடைகிறது யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் பொருள்தேடும் முறையைப் பெரும்பாலும் விசாலித்திருக்கின்றனர் ஆங்கிலக்கல்விதான் அதற்கு வழி என்பது எல்லாருடைய கருத்தும் வியாபாரம் கைத்தொழில் கமத்தொழில் முதலியன செய்வது சிறந்தவழியாகும் * * *

உத்தியோகத்துக்கு அலைந்து திரிந்து, அலுத்துப்போவதிலும் பரந்தன் முதலிய இடங்களிற் கமத்தொழிலால் அதிகம் பொருள் சம்பாதிக்கலாம் சுருட்டுத்தொழிலொன்றே யாழ்ப்பாணத்தில் எத்தனையோபேருக்கு வேலை கொடுக்கின்றது. பெரிய வீடுவாசல் கட்டுவதிலும் புதிய தொழில்துறைகள் தொடங்குதல் நலமென்பதைச் செல்வந்தர்கள் கவனித்தல் நன்று

விகடன் நவரசம்.

ஒடுக்கப்பட்டவர்களின் உயர்ச்சிக்காகவே திராவிடன் பத்திரிகை தாழ்த்தப்பட்டவர்களின் சங்கத்திலிருந்து மாசந்தோறும் வெளிப்பட்டுவருகின்றது இதுபோன்ற இன்னும் எத்தனையோ சங்கங்கள் ஊழியம்புரிந்து வருகின்றன. இச்சங்கங்களின் பொதுஸ்தாபகர்கள் ஒடுக்கப்பட்டவர்களன்று என்பதுண்மை இவர்களிற் சிலரல்ல பலரே இவ்விஷயத்தில் முற்பட்டு நிற்கின்றனர் இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் கருமநெறியைக் கொண்டிருக்கின்றார்களென்பதை நாம்சொல்லாமலே எவர்க்கும் தெரியவரும் இவர்கள் எக்கருத்தினைக் கொண்டிருப்பின் நமக்கென் என்பதும் ஒரு கேள்வி * * *

உலகத்தில் பலர்நிலவும் சமயங்கள் அனந்தம் ஒவ்வொரு சமயமும் உயர்வு தாழ்வு உரைப்பதைக் கண்டும் கேட்டும் வருகின்றோம் கடவுள் ஒருவரிருக்கிறார் என்பதே சமயமுழக்கம் கடவுள் ஒருவர் இருந்தும் சமயங்கள் பலவுள்ளவாதலின், நாம் சமயம் எதுவும் சரியென்று சொல்லுதல் குற்றமாகாதா? நம் முன்னை வகைவகையான மக்கள் வசித்தின்றார்கள் அறிவு ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாதலின் உலகில் தோன்றியுள்ள மதங்கள் ஒவ்வொன்றும் மாறுபட்ட கருத்துடனே சமயத்தோர் தத்தம் மதமே சிறந்ததென வழக்குரைக்கின்றனர் நம் சமய அறிஞர் சிலர் சமயம் எதுவும் சரியெனச் சொல்லுவதற்குச் சபைகளில் புறப்படுகிறார்களே, மறுமதத்திலுள்ள ஒருவன் தன் சமயத்திடையுள்ளவர்களுக்கு இகவிதமான போதனையைப் புரிந்தானெனக் கேட்டதில்லை இவர்கள் ஏனோ, இப்படிப் பேசவேண்டும் இவ்வாறு பிறசமயங்கள் பேரில் வெறுப்புக்கொள்ளாது, உண்மை நிலையை உணர்த்தும் சமயமே உண்மைச் சமயம் ஆகும். அம்மெய்ச்சமயம் நமது சைவசமயமே என்று அறிவுடையோர் கூறிப்போந்தனர். * * *

ஓர் வாலிபன் கையிலோர் புதினப்பத்திரிகையுடன் போவதைக் கண்ட பெரியவரொருவர், தம்பி கையில் வைத்திருப்பதென்ன தமிழ்ப் பத்திரிகையா என்னலும், தம்பி திரும்பி என்ன கேட்கிறீர் பெரியவரே தமிழ்ப்பத்திரிகையும் ஓர் பத்திரிகையெனமதித்து என் கையிலும் வைத்துக்கொண்டு வருவேனென்று நீர் எப்படித் துணியலாம் இது இங்கிலீஷ் பத்திரிகை அதுவும் லண்டனில் பிரசுரமாகும் ஓர் பத்திரிகையெனக் குறுக்கி மொழிந்தனராம் இதனைக்கேட்ட பெரியார், இனிமேல் யாரும் பத்திரிகை கொண்டுசென்றால், ஒன்றும் கேட்பதில்லையென்று முடிவுசெய்து கொண்டனராம். * * *

மனிதன் கடவுளால் படைக்கப்பட்டான் என கிறிஸ்தசமய முதலிய சில சமயங்கள் கூறுகின்றன ஒருபிடி மண்ணுக்கே உருவம் செய்து அதற்குள்ளே கடவுளானவர் தமது உயிர்ப்பை ஊதிவிட்டதினால் ஒரு ஆண்மகன் தோன்றினானென்றும் அம்மகனுடைய விலா எலும்பிலிருந்து ஒரு பெண்மகளை உண்டாக்கினாரென்பதே கிறிஸ்தவர் சமயக்கொள்கை கூறுகின்றது சைவசமயம் உயிர்கள் அநாதியாக உள்ளன என்றும் அவை புல், பூண்டு, தாவரம், விலங்கு உருவங்களாய் பூமியிற் பிறந்த பின் மனித உருவில் பிறக்கின்றன என்றும் மனித உருவத்தில் வருகிற உயிர்கள் சிறப்பான ஆறு அறிவுகளை உடையன என்றும் கூறுகின்றது மனித உயிர்களுக்கு தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து உலகில் சிறப்புடன் வாழும்படி செய்தலே கடவுளுடைய பொறுப்பாகும்.

* * *

கடவுள் உயிர்களினின்றும் வேறுபடும் நிலைப்பிலே ஒன்றுபடும் இருநிலையில் அத்துவிதமாகுமென்று சைவசமயம் கூறுகின்றது உயிர்கள் ஒருகால் [illegible] உலக வாழ்க்கையில் வந்தபின் அவை இருளிலும் ஒளியிலும் துன்பத்திலும் இன்பத்திலும் உழல்கின்றன. இந்த தனுகரணபுவனபோகங்களைக் கொடுத்தவன் கடவுள் என்றும் அவன் உதவி ஒருகணமும் இன்றியமையாது என்றும் உணர்ந்த மக்கள் [illegible] கவனித்து அன்பு செய்து அவனைப் பெருக்கிவாழ்த்து வருதலே மக்களின் கடமையாம்.

சந்தாநேயர்களுக்கு

கனந்தங்கியேன்மீர்! தங்களால் வரவேண்டிய பத்திரிக் கிரயத்தை அனுப்பித்தருப்படிக்குத் தயவாய்க் கேட்கின்றோம்.

திராவிடன்.

சென்னை:— 1928,
புரட்டாசி மீ 1௨ ஞாயிற்றுக்கிழமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச்சொல். குறள்.

இரும்பு விலங்கினும் கொடியது சாதிவிலங்கு

இவ்வுலக முழுமையும் காணப்படும் மக்கட்பகுப்பினர் எவரிடத்திலுங் காணப்படாத கட்டுப்பாடொன்று தமிழரிடத்தில் மாத்திரம் உண்டு. அது யாதெனிற் சாதிக் கட்டுப்பாடாகும். இரும்பு விலங்குகள் மனிதனின் கால் கைகளாகிய உடம்பை மாத்திரங் கட்டுகின்றன. சாதிவிலங்கோ ஒருவனின் உடம்பையு முயிரையும் உயிருள்ளவரையிற் கட்டுகின்றது. தொடக்கத்தில் அவரவர் செய்துவந்த தொழில் காரணமாகச் சாதிகள் ஏற்பட்டனவே யன்றித் தொழில்பற்றி அவரைக் குறைவாக மதித்திலர். சந்தனுமகாராசன் பரிமளகந்தியென்னும் மீன்வாணிச்சியை மணந்துகொண்டார். முன் பராசர் இவள் தோள் சேர்ந்து வியாசரைப் பெற்றார். திருவள்ளுவரின் தந்தை பகவனென்பவர் புங்கனூர்ப் பறைச்சியை மணந்தார். இன்னுமிதுபோன்ற செய்திகள் பழைய நூல்களிற் காணப்படுகின்றன. நாளடைவில் சாதிக்கட்டுப்பாடு என்பது மிகுந்து ஒருவருக்கொருவர் அடங்கி ஒடுங்கி வாழ்வதும் ஏனையர் அணிவதுபோல மற்றையோர் ஆடை அணிகலன்கள் அணியாதிருப்பதும் மற்றையருக்குரிய சுதந்திரங்களில்லாமல் இருப்பதும் தமக்கு மேலுள்ளவர்களின் பணிவிடைகள் புரிந்துகொண்டு அவர்கள் எண்ணப்படி நடத்தலுமே சாதிக்கட்டுப்பாடாகக் காணப்படுகின்றன. மக்களின் ஒருபகுதியாரே தீண்டாச்சாதியாரென்றும் வீதிவாசல்களுக்குள் செல்வதற்கு ஆகாதவர்களென்றும் ஏற்பட்டுவிட்டால் "எண்ணரிய பிறவிதனில் இம் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிது" என்னும் ஆன்றோர் வாக்கின் வாய்மை எங்கிருக்கின்றது. மக்கள், நாகல் அட்டை முதலிய அருவருக்கக்கூடியவற்றைத்தவிர மற்றல்லாப் பொருள்களையுந் தீண்டுகின்றார்கள்; தம் இல்லத்திலும் நுழைய விடுகின்றனர். மக்களின் ஒரு பகுதியார் பல்லி முதலியனபோன்ற தீண்டக்கூடாத பொருளானால் மனிதப்பிறவி அருமை என்று சொல்வது எங்ஙனம்? தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களின் ஏவல்களைப் பார்த்து வாழ்வதன்றி ஏனையரைப்போன்று நல்ல ஆடை உடுக்கவும், நகை அணியவும், மாருடி சாவணி போடவும் கூடாதென்றால் மனிதனுக்குரிய சுதந்திரம் எங்கேயிருக்கின்றது. தாழ்த்தப்பட்டவர்கள் என்போர் மாபால் உயர்வதற்குப் பாடுபடவில்லை; சமமாக உண்பனவு தின்பனவுகளிற் கலக்கவேண்டுமென்று பாடுபடவில்லை; வேறு எதற்கு, மக்களுக்குரியதாகிய சுதந்திரங்களைத் தாமும் பெறுதல் வேண்டுமென்பதே. தின்பனவு உண்பனவு முதலன வழக்கங்கள் அவரவர் மனப்பான்மையை ஒத்தன. மக்கள் உள்ளளவும் சாதி இருந்தேதீரும். ஏனைய மக்களைப்போன்று நாமும் மக்கட்குரிய சுதந்திரத்தைப் பெறுதல்வேண்டும். இப்பொழுது பெரும்பாலும் இவ்வித கிளர்ச்சிகள் நடந்துவருவதுண்மை. ஆயினும் சிற்சிலவிடங்களில் மேலுள்ளவர்களால் ஒடுக்குமுறை கொஞ்சமுந் தளர்வின்றி கையாளப்பட்டுமே வருகின்றது. இவைகளைக் கண்டறிந்த பெரியார் சிலர் இவ்வித ஒடுக்க முறைகள் இப்பொழுதும் இங்கு இருப்பது நமக்கு நூதனமாயிருக்கிறதெனப் பேசிவிடுகின்றனர்.

நம்மவர் கல்வியறிவுடையவர்களாய் எதிர்காலநடையில் நன்னிலையடைவார்களென்பதில் ஐயமில்லை. நம்மவர் தாம் ஒடுக்கப்பட்டவரென்றும் பிறர் தம்மை ஒடுக்குகிறார்களென்றும் கூறுவது முற்றும் சரியாகத் தோன்றவில்லை. நாம் சும்மா இருக்கும்போதே பிறர் ஒடுக்குகிறார்களென மற்றவர்களில் குற்றஞ்சுமத்தல் நன்மை பயக்கமாட்டாது. நம்மவர்களுக்குள்ளே ஒற்றுமையில்லை இப்பொழுது நமது முன்னேற்றத்துக்குத் தடைக ளிருப்பதாகத் தெரியவில்லை. ஒற்றுமையே வேண்டும்,

நாட சுத்தமாயிருப்பதே சந்தோஷம்.

உலகில் உயிர்கொண்டு வாழும் பிராணிகள் முதலாக மரஞ் செடி கொடிகள்வரை எல்லாவற்றிற்கும் உலகில் வாழ்ந்திருப்பதற்கு அவசிய சாதனமாயிருக்கும் பலவற்றுள்ளும் முதன்முதலாகப் பெறவேண்டிய சாதனம் சுகம் எனப் பொருள்படுகிறது. இதனை ஆராயுங்கால் சுகம் என்பது என்ன? அது எந்தப் பொருளைக் குறிக்கின்றது? என்பதை நாமறியவேண்டும். சுகம் - சௌக்கியம் - ஆரோக்கியம் என்பன ஒருபொருளைக் குறிக்குஞ் சொற்களாகும். விரிவுக்கஞ்சி இங்கு பிறவற்றைவிட்டு மனிதர்களைப்பற்றிமட்டும் பேசுவோம். மனிதர்களாகிய நாம் பிறந்தது முதற்கொண்டு யாதொரு துன்பங்களுக்கு இலக்காகாது சந்தோஷத்தோடு வாழ்ந்துவருவதற்கு முக்கியமாய் நமக்கிருக்க வேண்டுவது சுகமாகும். சுகம் இன்றேல் நாம் பல நோய்களின் வழிப்பட்டு சரீரத்தின் இயற்கைத் தன்மை குன்றியும், உயிர் சிறுக்க நேரிட்டும் இது முதலிய பல கஷ்டங்களையுமடையவேண்டிவரும். இவைகளை யோசித்துப் பார்க்கின் சுகத்தை எவ்விதத்தாயினும் அடைய முயற்சிக்க வேண்டுமென்னும் அருமை நன்கு விளங்கும். இவ்விதமாகிய சுகம் இயற்கையில் ஏற்பட்டிருப்பினும் செயற்கைத்தோஷத்தால் குறைவுபடுகிறது. எவ்விதமெனில் நாம் உயிர்கொண்டுவாழ்வதற்குச் சாதனமாயிருக்கும் காற்று தண்ணீர் உணவு என்னுமிவைகளை நாம் என்றும் உட்கொள்ளுகிறோம். அவ்விதமுட்கொள்ளும் அப்பொருள்கள் சுத்தமானவைகளாயிருப்பின் நமது தேகத்தைப் போஷிப்பதற்கும் நாம் சுகசீவியத்தோடு சீவித்திருப்பதற்கும் பிரயோசனப்படுகிறது. அவ்விதமின்றி அவை அசுத்தமானவைகளாயிருக்குமாயின் நமது சுகத்திற்கு உதவாமற் போவதுமன்றி நமது சுகத்தைக்கெடுத்து பலதுன்பங்களுண்டாக்குகின்றன. இதனையே செயற்கைத் தோஷமெனக் குறிப்பிடத்தக்கது. இதை யுணரும் பகுத்தறிவுடைய நாம் சுகத்தைக் கெடுக்கும் வஸ்துக்களைச் சேர்க்காது விலக்கி தேகசுகத்திற்குச் சாதகமாகிய வற்றை யனுசரிக்க முயலவேண்டும். இதனால் சுகத்தைக் காப்பாற்றி விருத்திசெய்து கொள்ளவும், அன்றி அதனை யழித்துக் கொடுந் துன்பங்களை யடையவும் நாம் சுதந்தர முடையவராகிறோம். இதுமாதிரி சுகத்தைப் பெற்றிருக்கும் நாம் வெகு சாக்கிரதையாய் நம்மைப் பாதுகாக்க முயலவேண்டும். எவ்வழியிலாயினும் நமக்குச் சிறிது சுகங்கெட்டபோது உடனே அதனைத் திருத்திக் கொள்ள முயலாது பின்னால் சிகிச்சை செய்துகொள்ளலாமென அபேட்சை செய்யலாகாது. நோய் வந்தபின் அதனை நீக்க முயலுவதிலும் முன்னரே நோயணுகாதபடி தடுத்துக்கொள்ளுதலே சிறப்பு. ஏனெனில் வெள்ளம் வந்தபின் தடுக்க முயலுவதினும் வெள்ளம் வருமுன்னரே அணைகோலுதலன்றோ அறிவுடையோர் கடமை. ஆகையால் நாம் முதலாவதாக நம் சுகம் கெடுவதற்குரிய வழிகளைக் கண்டறிந்து அவற்றினின்றுந் தப்பி சுகத்தை வளர்க்கும் முறையைக் கண்டு கையாடவேண்டும். இந்த உத்தேசத்தை நிறைவேற்றவேண்டிப் பல ஆராய்ச்சிகளைச் செய்து சுகத்தைப் பேணும் முறைகளையும் சுகங் கெடும் வழிகளையும் விளக்கிக்காட்டிப் பல நூல்களை வல்லுனர்கள் எழுதிவருகிறார்கள். அவைகளை வாசித்தும் நம் அனுபவங்களைக் கொண்டுமிதத்தும் நாம் நடக்கவேண்டியவராகிறோம். சுகம் என்பதைப்பற்றிச் சற்றே குறிப்பிட்டோமாதலால் இனி சுகத்திற்கு எதிர்மறைப் பொருளையுடையதாகு சுகத்தைப் பாதுகாக்கும் முறைகள் சிலவற்றைச் சுருக்கிக் கூறுகிறோம். நமது சுகங்கெடுவதற்கு ஆகாயம், சலம், சாப்பாடு இவைகளின் கெடுதியே காரணமாதலால் நாம் சுத்தமான அக்குற்றமற்றதுமாகிய ஆகாயத்தையும் தண்ணீரையும் சாப்பாட்டையுமே உட்கொள்ளவேண்டும். நம்மைச் சுற்றியுள்ள ஆகாயங்கெட்டுப்போகாவண்ணம் பாதுகாக்கவேண்டியது முக்கிய கடமை. ஆகாயம் கெட்டுப்போவதற்குப் பண்டங்கள் அழுகிப்போவதும் மலமூத்திராதிகள் விடுவதும் பிராணிகள் மூச்சுவிடுவதும் இப்படியே பலவுங் காரணமாகும். ஆகையால் இவ்வித அசுத்தங்களைக் கூடியமட்டும் நாம் வசிக்கும் பக்கங்களில்லாமல் அப்புறப் படுத்தவேண்டும். ஆகாயம் எவ்வித வாசனையுமுடையதாயினும் கெடுதியை யுண்டாக்கும். இப்படியே உட்கொள்ளும் உணவும் அழுக்கில்லாததாய் இலகுவில் சீரணிக்கக் கூடியதாயும் பலமுள்ளதாகவும் ஓர் அளவுடையதாகவும் இருத்தல்வேண்டும் உண்ட ஆகாரம் நன்கு ஜீரணமாகுமுன்னர்ச் சாப்பிடுவதால் பல நோய்களுக் கிடனுகின்றன. 'மிகுதூண் விரும்பேல்" என ஒளவையாரும் கூறியுள்ளார். இவ்வித வழிகளுக்கு தவறினால் நமது சுகங் கெட்டுப் பலநோய்களுக்கு இலக்காகித் துன்பமடைந்துயிரிழக்கவேண்டிவரும். இதனை விரிக்கிற் பெருகும். சிறக்க, உலகில் சாமானியமாக ஓடியாடிக் கைத்தொழில் முதலியன செய்து சீவிப்பவர்களை விட ஓர் இடத்தில் உட்கார்ந்தபடி வேலைசெய்து சீவிப்பவர்களுக்குப் பிரத்தியேகமாகத் தேகாப்பியாசஞ் செய்யவேண்டுவது மிகவுமவசியமாயினும் யாவருக்கும் தேகாப்பியாசம் இன்றியமையாதது. மேலும் மனதில் வருத்தமொன்றிருக்குமாயின் தேகவன்மை குன்றி சுகங் கெடும் என்பதைப் பெரிதும் கவனித்தல் வேண்டும். "மனம்போல வாழ்வு" என்றபடி சதா குதூகலமுஞ் சந்தோஷமும், ஊக்கமும், தைரியமும் நம்மனதில் குடிகொண்டிருத்தலால் தேகவன்மை பெருகிச் சுகம் நிலைத்திருக்கும். நமது பிள்ளைகளுக்கும் சிறுவயதுமுதற்கொண்டே தேகசுகத்திற்கும் சுத்தத்திற்கும் அவசியமாய்த் தினந்தோறும் தவறுது ஸ்நானஞ் செய்வதற்கும் சுத்தமான அழுக்கற்ற நல்லுடைகளையணிவதற்கும் நல்ல ஆகாயம் சலம் உணவு முதலியவைகளை உட்கொள்வதற்கும் தேகாப்பியாசங்களைக் கையாடுவதற்கும் சந்தோஷமான மனத்தோடிருப்பதற்கும் பழக்கவேண்டும். மதுமாமிசம் இறந்த பிராணிகளின் இறைச்சி இவைகளை உண்ணுவது ஆகிய இவ்வழக்கங்களினின்றும் விலகவேண்டுவதவசியம்.

மனமும் மாறும்.

சிறப்புற்றோங்கிய செந்தமிழ்நாட்டிலே தெய்வஞானியாராகிய ஒளவையார் பாடலைச் செவிக்கினிமையாய்க் கேட்க விரும்பிய ஸ்ரீ முருகக்கடவுள் எளிமை பொருந்திய பையனைப்போல ரூபங்கொண்டு ஓர்நாவல்மரத்திலேறி விளையாடிக்கொண்டிருந்தனர் அவ்வேளை ஒளவையாரும் அகஸ்மாத்தாக அவ்வழியே வந்து அம்மரத்தின்கீழ்த் தங்கினர். மாறுருபங்கொண்டு மரத்தின்மேலிருந்த ஸ்ரீ முருகனை நோக்கி, "அப்பா! எனக்கு வயிறு பசிக்கிறதாகையால் நாவற்பழம் போடக்கடவர்' யென்றாள். அதனைக்கேட்ட முருகன் "அம்மா! உங்களுக்குச் சுடுபழம வேண்டுமா, அல்லது சுடாதபழம் வேண்டுமா" என்றார். ஒளவையார் ஆச்சரியமடைந்து, சுடுபழம் ஒன்று உண்டா எனப் பரிகசிப்புடன் தமக்குள் நினைந்து, "அப்பா! சுடாத பழமே போடுவாய்" என்றாள். அவர் பழங்களைக் கொப்புடன் ஆட்டிவிட்டார். பழங்கள் மணல்மீது வீழ்ந்ததினால் மணல் ஒட்டிக்கொள்ள, ஒளவையார் தமது திருக்கையினால் பழத்தையெடுத்து மணலை யூதினார். அது கண்ட முருகன், "அம்மா! நீ சொல்லிய பழத்தை விடுத்து சுடுபழத்தை யேன் எடுத்தீர்". பழம் அதிகம் சுடப்போகிறது. ஊதி ஊதி உண்பீராக" என்று சொல்லிப் பரிகசித்தபோது ஒளவையார் பாடியது.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி, இருங்கதலித் தண்டுக்கு நாணும்- பெருங்கானில், காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்ற, தீரவுந் துஞ்சாதென் கண்' என ஒருவெண்பாவில் முடித்தார். பாடற் சுவையைக்கண்ட கலியுகவரதர் அம்மா! உலகில் அரியது எதுவெனவினவ... அரியதுகேட்கின்ற வரிவடிவேலோய், அரிதரிது மானிடராதலரிது. மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தலரிது, பேடு நீங்கிப் பிறந்த காலையும், ஞானமுங் கல்வியும் நயத்தலரிது, ஞானமுங் கல்வியும் நயந்த காலையும், தானமுந் தவமுந் தான் செயலரிது, தானமுந் தவமுந் தான் செய்வராயின், வானவர்நாடு வழிதிறந்திடுமே" என அப்பெருமானுக்கு உபதேசித்தருளினார் ஆகையால் கிடைத்தற்கரிய மானிடசென்மமெய்திய புண்ணியசிலர்களுக்குப் பழவினை நிறைந்த இந்தப் பிறவிக் கடலை நீந்திக் கரையேறி, கைலாசபதியாகியும் உமாபதியாகியும் சிவபரமாக ஒருபராய் விளங்கக்கூடிய எம்பெருமானாகிய தம்பிரான் சாக்ஷாத் பகவானின் திருவடிநிழலடைந்து நாமுத்திப் பெறுதற்கு முக்கிய சாதனமாயுளது "கடவுள் தியானம்" என்பதுவே சமயசம்மதமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. தியானம் என்பது கடந்து நிற்கும் பரம்பொருளுடன் இரண்டறக் கலத்தற்கு முக்கிய சாதனை சிந்தனை பக்தி தியானமின்றி இறைவனடியைச் சார்ந்து வாழ முடியாதாகையினாலே 'முக்கிய கடமை" என்கின்றோம். ஒருநிலையிலே நில்லாத மனத்தை யுடையோர் சிந்தனை சிறிதேனும் பயன்படாதேயாகும். "மனமடங்காச் சிந்தனை மாறுமே மாறுமே" என்னும் ஆன்றோர்வாக்கின்படி மனம் அடங்காது செய்யும் சிந்தனை சிறிதுநேரம் அதாவது இரண்டு மூன்று நிமிஷம் நிலைத்து நிற்கும் பின்னும் வேறேது மாலோசிக்கும். இப்படியே நிலைத்தும் நிலையாததுமாய் முடிகின்றது.

ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஒளவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்.)

அதன் பின்னர் ஔவையார் பாண்டி நாட்டிலுள்ள பலவெவ்ஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு வரும்போது, ஓர் உள் நாட்டுக் கிராமத்தில் ஒரு குறவனுக்கு இருமனைவியருண்டு; அவர்களுள் மூத்தாள் நாயகபக்தி, தெய்வ வழிபாடு, தருமசிந்தை முதலிய சற்குண சற்செய்கைகளை யுடையவள்; இளையாளோ! அழுக்காறு, புறங்கூறுதல், கோட்சொல்லுதல் செய்ந்நன்றிமறத்தல், நாணமின்மை சற்றமும் யாரோடுஞ் சண்டையிடுதல், உலோபத்தன்மை முதலிய தீக்குணங்கள் அமையப் பெற்றவள். இவ்விருவர்க்குங் கொழுநனாகிய குறவன், இளையாள் மாட்டு மிகுந்த மோகமுடையவனும், அவள் மூத்தாள்மீது சுமத்துங் கோளுரைகட்கெல்லாம் செவி சாய்த்து, உண்மையை ஆராயாது, மூத்தாளையே அனவரதமுந் தண்டித்து வருவான் மூத்தாளோ தனது நாயகன் சக்களத்தியின் ஆசைவார்த்தையின் மயக்கிச் சகித்தற்கரிய எவ்வித நிஷ்டூரங்களைச் செய்யினும், புருஷனை முனிந்து திட்டாது, அவன் ஏவிய பணிவிடைகளைச் சிரமேற்கொண்டு ஒழுகிவந்தனள். அக்குறவன் ஓர் பலாக்கன்றை, நாட்டிப் பசளையிட்டு வாடாது தண்ணீர்ப்பாய்ச்சிக் கண்ணை யிமைகாப்பது போல" மிக்க அருமையோடு வளர்த்து வந்தனன் அப்பலாக்கன்றானது சிறிது காலத்துள்ளே செழித்துக் கொழுமையாக வளர்ந்து, எண்ணிறந்த பிஞ்சு காய் பழங்களையுடையதாய், பார்ப்போருடைய கண்ணைக் கவரத்தக்க வனப்பெய்தியிருந்தது. அந்நாளில் குறவன் வேற்றூருக்குச் செல்லவேண்டிய அவசியகருமமிருந்தமையால், மூத்த மனைவியை விளித்து அடி! நான் இன்ன ஊருக்குச் செல்கின்றேன். மீண்டு வருவதற்கு மூன்று நான்கு நாட்கள் செல்லும், அதுகாறும் இப் பலாக்கன்றை மாடு ஆடு முதலிய மிருகங்கள் கடித்துப் பழுது பண்ணாமலும், திருடர் முதலாயினோர் காய்கனிகளைக் குறைபடாமலும் வெகு சாக்கிரதையோடு பாது காக்குதி; உனது பாராமுகத்தால் இப்பலாவிற்கு யாதும் பழுது சம்பவிக்குமாயின், நீ பிராணனோடு வைகுதல் அரிது! இது திண்ணமென்று அச்சுறுத்திச் சென்றனன். தலைவன் போன பின்னர் மூத்தாள் நாயகனுடைய கட்டளைப்படியே, அப்பலா மரத்தை மிகவுஞ் சாவதானமாகப் பாதுகாத்து வந்தனள். குறவன் பிரயாணஞ்செய்த இரண்டாம் நாள் மூத்தாள் ஏதோ காரியார்த்தமாக வெளியே போயினள்; அந்தச் சமயத்தில், இளையாள் தனது சக்களத்தியினது பகைமையைச் சாதிப்பதற்கு இதுவே தருணமென வுன்னி, ஓர் கூரிய கத்தியினால், அப்பலாக்கன்றை இரண்டு துண்டாகும்படி சேதித்து விட்டு, ஒன்றுமறியாதவள் போன்று மௌனமாயிருந்தனள் வெளியே சென்றிருந்த மூத்தாள் வந்து பலாமரம் துண்டிக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்ணுற்று, ஐயகோ! தெய்வமே! நான் இக் கொடிய செயலுக்கு யாது செய்வேன்? எனது நாயகர் இத் தீச் செயலை யுணரின் தமியேனைச் சித்திரவதை செய்வாரே! என்று சிந்தை யலமந்து, ஆற்றொணாதெனத் துக்கசாகரத்தில் இடைவிடாது சொரியப் பிரலாபித்துக் கொண்டிருந்தனள். அவ்வூரி'ய போந்த ஒளவைப்பிராட்டியார் அவளுடைய அழுகை ஒலியைக் கேட்டு, அவளருகு சமீபத்திலே வந்து மகளே! உனக்கு எய்திய இன்னல் யாது? இயம்புதி யென்றனர். அவள் ஒளவையாரைநோக்கி அன்னையே! யான் ஒன்றுமறியேன்: என்மீது அழுக்காறுற்ற கொடிய மனத்தார் யாரோ இத் தீச்செயலை யிழைத்தனர். எனது பர்த்தாவோ மகாகோபி. அனவரதமுங் கள்மயக்குடையர். ஆதலால் அவர் வந்து தமியேனை இன்னலுறுத்தாவண்ணம் காப்பாற்றுதிரென்று, ஒளவையாருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினள். ஒளவையார் இளையாளே இத்தீச்செயலைப் புரிந்தனள் மூத்தாள் நிரபராதியென வுணர்ந்து மகளே! எம்பெருமானுடைய கிருபையால், உனக்கு எத்தகைய அலக்கணுமெய்தமாட்டாது நீ வியாகுலமடையற்க" எனத் தேற்றி, வெட்டுண்ட அடிமரத்தின் மருங்கிற் போய், அதைப் பழமைபோலத் தழைக்கும்படி செய்ய எண்ணி, கூரிய வாளினாலே வெட்டிவிடப்பட்ட வேர்த்த பலாமரமானது, ஓரிதழாகி, உயர்ந்த மரமாகி, சிறந்த ஒரு வண்டு உருவம்போன்ற கொட்டையை யுடையதாகி, வலிய காய்களையுடையதாகி, தின்னும் கனிகளையுடையதாகி, முன்னிருந்ததுபோலவே இவ்வுலகத்தில் நிலைபெற்றிருக்க: என்னுங் கருத்தமைய,

"கூரியவாளாற்குறைத்திட்டகூன்பலா
ஓரிதழாய்க்கன்றுயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற்கொட்டையாய்வன்காயாய்த்தின்
பழமாய்ப், பண்டுபோனிற்கவிப்பாய்"

என்னும் வெண்பாவைப் பாடியருளினர். உடனே அப்பலாவானது, முன்னிருந்த சிறப்புகளெல்லாம் ஒருங்கமையப்பெற்று விளங்கியது. அதனைக் கண்ணுற்ற மூத்தாள் மட்டற்ற மகிழ்ச்சியெய்தி, அம்மணி! தேவரீர் கிருபாநோக்கம்பெற்ற அடியாளை, எனது கணவனது சீற்றம் யாதுசெய்யும்? என்று புகழ்ந்து தாயே! கைம்மாறு கருதாது எளியேனை இன்னல்வாரிதியினின்றுங் கரையேற்றி யிரட்சித்த

உமக்கு என்ன பிரதியுபகாரஞ் செய்யப்போகின்றேன் எனது நாயகனே, இளையாளமீது கொண்ட மோகத்தினால், தனது தேட்டம் யாவற்றையும் அவளுக்கே கொடுத்துவருகின்றார் எனனிடத்தில ஒரு காசுக்கும் வழியில்லை! ஆனாலும் முக்காற்படி தினை அரிசி வைத்திருக்கிறேன்; அதனை நிராகரியாது மனஉவகையோடு ஏற்றுக்கொள்ளுகிறேன்று முகமலர்ச்சியோடு கொடுவந்து கொடுத்தனள். ஒளவைப்பிராட்டியார் அத்தினையரிசியை உள்ளன்போடு ஏற்று முன்றானையின் முடியிட்டுச் செல்லும்போது, தனது அரண்மனையின் மேலுப்பரிகையின் வைகிய குலோத்துங்கசோழராசன் கண்டு, அம்மணி! என்ன மூடை பெரிதாயிருக்கின்றதே! என விகடமொழியாலுசாவ, பிராட்டியார் வேந்தனை விளித்து, புரவல! கேட்பாயாக, தனது சக்களத்தியால் வெட்டுண்ட பலாமரத்தைத் தழைக்கும்படி நான் பாட, அக்குறப்பெண்ணும் மூவுழக்கென்னும் பெயரினையுடைய முக்காற்படி தினையரிசியைத் தந்தனள் உப்பின்பொருட்டும், புளியின்பொருட்டும் ஒரு பாடலைப் பாடி என மனமானது ஒப்பியாரிற்கும் என்னுங் கருத்தமையமைத்து,

"கூழைப்பலாத்தழைக்கப்பாடக்குறமகளு
மூழக்குழக்குத்தினைதந்தாள்—சோழாகேள்
உப்புக்குப்பாடிப்புளிக்குமொருகவிதை
யொப்பிக்குமென்றனுள்ளம்."

என்னும் வெண்பாவைப் பரிகாசமாகப் பாடி வேந்தன்பால் விடைபெற்றுக்கொண்டு சென்றனர். (தொடரும்)

பொதுச் சமாச்சாரம்.

காலநிலை.

சென்ற செவ்வாயன்று சிறுமழை வருஷித்திருக்கிறது. ஊரில் மூன்றுநாட் சுரம் பரவுகின்றது. சுரவாய்ப்பட்டோர் இரம்பவும் பெலவீனமடைகின்றனர். இச்சுரம் லேசானதன்று. சிறுவர்களை அதிகம் வருத்துகின்றது. தொற்றும் குணமுடைய சுரமெனக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு மின்சார வெளிச்சம் அமைக்குந் திட்டத்திற்கு இலங்கை அரசினரைக் கடன் கொடுக்கும்படி கேட்கவேண்டுமென்று நகரசங்க அக்கிராசனவர்கள் சங்கத்தின் சார்பாகக் கொழும்புக்குச் சென்று ஒழுங்கு செய்யவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதாம்.

கீரிமலைத் தீர்த்தக்குளங்களைப் பரிபாலிக்கும் செலவை அனுமதிக்கவேண்டுமென்று தெல்லிப்பழைக் கிராமச் சங்கத்தார் கேட்டிருந்த விஷயம் வாதிக்கப்பட்டபோது அங்ஙனஞ்செய்தற்கு நகரசங்கத்துக்கு அதிகாரமில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது.

கண்டி வீதிகளிற் செல்லும் யானைகளுக்கும் வண்டிகளைப்போல் முன்னும்பின்னுமாக வாலிலும் துதிக்கையிலும் விளக்குப் போடவேண்டுமென்று நகரசபையில் வேலை செய்கிறார்களாம்.

நீர்கொழும்பில் மனுவேல் பெர்னாண்டோ என்பவன் ஓர் பன்றியை அதன் உடலில் ஓர் கூரிய மரக்கட்டையை ஏற்றி வதைத்துக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் நீதிபதி அவனுக்கு 20 ரூபா அபராதம் விதித்தனர்.

இங்கிலாந்தில் சுமார்பலதிறப்பட்டபெண்கள் 200பேர்வரையில் வானத்தில் பறக்குமாறுபயிற்சிபெற்றுவருகிறார்களாம். இதற்குமேல்என் செய்வார்களோ.

சிதம்பரம் நந்தனார் கழகத்தின் தலைவரான அ. மாசிலாமணித்தேசிகரின் மனைவியார் அமிர்தம்மாள் அவர்கள் சிதம்பரம் நகரசபையின் ஓர் அங்கத்தினராய் நியமனம் பெற்றிருக்கின்றார்.

இலைக்கறி யென்பது கீரைவகை. கீரைவகைகளை ஏராளமாக உண்டுவந்தால் மலச்சிக்கலே யிராது. ஆனால் மலச்சிக்கலுக்கு மருந்தென்று எதனையேனும் விற்றுப் பொருளீட்டும் போலி வைத்தியர்கள் இந்த உண்மையை வெளியிட மாட்டார்கள்.

இங்கிலாந்திலே பர்மிங்காமில் க்ஷயரோகத்தால் கெட்டுப்போன ஒருவனது முதுகெலும்பை எடுத்துவிட்டு ஒரு மாட்டின் எலும்பை அந்த அளவில் சீர்படுத்தி வைத்துச் சரிப்படுத்தியதில் அவன் சுகமடைந்து நன்றாக வேலை செய்கிறான்.

மனிதர்களைப்போலவே சில மீன்கள் ஆடையணிய அதிக ஆவலுள்ளவைகளாயிருக்கின்றன. இந்துமகாசமுத்திரத்திலுள்ள ஒருவகைக் கடற்பாசியை அவை தங்களுக்கு ஏற்ற ஆடையாக மேலே சுற்றிக்கொள்ளுகின்றனவாம்.

ஸ்விட்சர்லாந்துதேசத்தில் ஆர்பீனோ என்ற ஊரும் மலை இப்பொழுது மிகவிரைவாக நகரத் தொடங்கியிருக்கிறதாம் அதனால் மலையருகே உள்ள கிராமவாசிகள் கலக்கமுற்று அவ்விடத்தைக் காலிசெய்துகொண்டிருக்கிறார்களாம்.

பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள பிரான்சுக்காரர் ஆட்சிக்குட்பட்ட ஹேறாவென்னுந் தீவில் போதுமான எலிகளைக் கொடுத்து வலிகளுக்குப் பதிலாகப் பெண்பிள்ளைகளை மனைவியாக்கிக்கொள்ளலாமாம்.

தேகவியோகம்.

சேண்பகவரதமுதலி வழித்தோன்றல் சுன்னாகவாசன் ஸ்ரீ வேலாயுதபிள்ளை உடையார் மகன் விதானை ஸ்ரீ கார்த்திகேசபிள்ளை அவர்களின் மகளும் வடமராட்சியைச் சேர்ந்த வல்வெட்டியிற் சிறப்புற்று வாழ்ந்த சந்திரசேகரமாப்பாணமுதலி வமிஷத்து ஸ்ரீ குமாரு சங்கரப்பிள்ளை மகன் ஸ்ரீ பழனியப்பாபிள்ளை அவர்களின் பிரிய மனைவியுமாகிய ஸ்ரீமதி செல்லாச்சிப்பிள்ளை அவர்கள் சென்ற ஆவணிமீ 30உ வியாழக்கிழமை இரவு சிவபதமடைந்தனர். இவர் சிவாலய தரிசனமும் சிவபக்தியோடும் இல்லறதர்மத்தை மிக அடக்கமாயும் செம்மையாயும் நடத்திவந்தவர். கண்டியைச்சேர்ந்த புசலாவைப் பகுதியில் ஓய்சியாரயிருக்கும் ஸ்ரீ ப. சின்னத்துரை அவர்கள் கனிஷ்டபுத்திரன்; வண்ணைநகர் ஸ்ரீ S. கனகரத்தினமவர்களின் மனைவி ஸ்ரீமதி தங்கம்மாள் அவர்கள் கனிஷ்ட புத்திரி குவலாலம்பூரில் கவின்மெந்து சர்விஸ்றறிபோட செக்கிறிற்றறி ஸ்ரீ K. N தம்பித்துரை அவர்கள் பௌத்திரர்; இன்னுங் காலஞ்சென்ற யாழ்ப்பாண மணியகாரன் ஸ்ரீ தம்பாபிள்ளை அதிகாரம் அவர்களும்; அரசாட்சிப் பகுதியில் இஞ்சினியர் கந்தோரில் கிளாக்காயிருந்து தற்சமயம் உபகாரச்சம்பளம் பெறும் மல்லாகம் ஸ்ரீ வேதவனம் சின்னத்தம்பி அவர்களுக்கும் உரிய சோதரி; இவர் தமது கடந்த எழுபத்தைந்தாவது வயதில் இவ்வுலக சீவியத்தை வெறுத்து விண்ணுலகெய்தினர். இவரை இழந்த புத்திராதியோர் துன்புறுகின்றனர்.

நாற்றிசை நோக்கு.

அற்ப ஆசை அதிக நஷ்டம்.

கடந்த சிலநாட்களின் முன் அளவெட்டி சின்னட்டியனும் வயிரவன் என்னுமிருவரும் தெல்லிப்பழைப் புகையிரதஸ்தானத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ரிக்கற்றில்லாமற் பிரயாணஞ் செய்தனரென்னும் குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி அவர்களின் முன் நிறுத்தப்பட்டனர். இருவரும் தாம், தாம் 8-சதம் கொடுத்துப் பெறவேண்டிய ரிக்கற்றைப் பெறாமையால் முறையே 50—00 - 50—00 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றனர் இவர்களின் ஆசைக்கே அதிக நஷ்டம்.

மெய்சொன்னால் கண்ணொளி விளங்கும் பொய்சொன்னால் கண்ணொளி மழுங்கும்.

மெய் பேசுபவர்க்கு கண் ஒளி விளங்குமென்றும், பொய் பேசுபவர்க்கு கண் ஒளி குறைந்துபோமென்றும், நியூயார்க்கில் பேர்பெற்ற கண்வைத்தியரான பேட்ஸ் என்பார் மக்களைப் பலவகை வைத்திய முறையில் சோதித்ததின் பயனைக் கூறுகின்றார். பொய்பேசுபவர்க்கு கண்கெடு மென்பது நம்நாட்டாரின் அநுபவபூர்வமான நம்பிக்கை

ஜனமித்திரன்.

ஜனமித்திரன் சென்னையிலிருந்து வெளிவரும் ஓர் புதிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இதன் நோக்கம் நாட்டின் ஒற்றுமை விவசாயம் கைத்தொழில், வியாபாரம் முதலியன மேம்பாடடைய வேண்டுமென்பதும் இன்னும் பல அரிய விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. வருடசந்தா இந்தியா இலங்கை ரூபா 1—00-ம் ஏனைய பிறதேசங்களுக்கு ரூபா 1-ம் அணா 4-ம் இதனைப் பெற்று வாசிக்க விரும்புவோர் சென்னை, திருவல்லிக்கேணி, ஜனமித்திரன் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் எமக்கனுப்பிய பத்திரிகையை மாற்றுப் பத்திரிகையாகப் பெற்றோம்.

வெள்ளைக்காரப்பெண்ணின் புரட்டு.

கல்கத்தாவில் மிஸ்கே வொயிட் என்னும் ஒரு வெள்ளைக்காரப் பெண், மோட்டார் ஓட்டி மதரபாக்ஸின் என்பவன் தன்னைக் கற்பழித்ததாக ஒரு வழக்குத் தொடுத்திருந்தாள் ஒரு நாள் இரவு ஹௌரா ஸ்டேஷனில் இருந்து அவனுடைய வாடகை மோட்டாரில் தான் ஏறிச்சென்றதாகவும், தனிமையான இடத்தில் மோட்டாரை நிறுத்தித் தன்னைக் கற்பழித்ததாகவும், தான் போட்ட கூச்சலைக் கேட்டு மிஸ்டர் பெய்ன் பிரிஜும் மிஸஸ் ஸ்டோனும் வந்து தன்னை மீட்டதாகவும் அவள் பிராதில் கூறியிருந்தாள் ஆனால் எதிரி வேறு கதை சொன்னான். மிஸ் வொயிட், மைதானத்தைச்சுற்றி மோட்டாரை ஓட்டிக் கணக்கேற்ற கள்ளப் புருஷனைத் தேடச் சொன்னதாகவும் இதனால் வாடகை அதிகமாகவே பணங்கொடாமல் தப்பித்துச் செல்ல முயன்றதாகவும், இதற்குள் அங்கு வந்த வங்காளிக் கனவான் வாடகைப் பணத்தைக் கொடுக்க ஒப்புக்கொண்டு அவள் அவருடைய வண்டியில் ஏறிப்போனபோது, மேற்படியார் வந்ததால் அவர்களுடன் சென்றதாகவும் கூறினான். இவ்வழக்கு விசாரணை நடந்த இருதினங்களிலும் மிஸ் வொயிட் வரவில்லை மூன்றாம்முறை மாஜிஸ்திரேட் அவர்களுக்கு வாரண்டு அனுப்பினார் கடைசியாக 25உ நடக்கவிருந்த விசாரணைக்கு அவள் வந்து குற்றங்கு விசாரணையில் சரியான மறுமொழிகள் கூறாததனாலே மாஜிஸ்ட்ரேட் எதிரியை விடுதலை செய்தார். —சுவதந்திர

வாழைகளின் நோயைத் தடுக்கும்வழி.

வாழைமுபானது குலைபோட்டபின் அதன் காய்கள் முற்றி பழுக்கும்வரைக்கு பூவை முறித்தல் கூடாதாம் பூவை முறிப்பதினால் காய்ச் சோதிப்பருப்பதையும் குலையையும்

யோவேலின் ஊழியம்!

ஒடுக்கப்பட்டவர்களின் ஊழியசங்கத்தின் வேலைகளைக்குறித்தும் அதன் அமைப்பைக் குறித்தும் பலமுறைகளில் திராவிடனில் எழுதப்பட்டது. ஊழியசங்கத்தில் ஒடுக்குவோர் பலரும் ஒடுக்கப்படுவோர் சிலரும் முதன்மை வகுத்திருக்கின்றனர். இச்சங்கத்தில் கத்தோலிக்க புறெத்தஸ்தாந்து மார்க்கத்தாரைவிட, சைவர்கள் எவரேனும் சேர்ந்து உத்தியோகம் பெற்று சங்கவேலைகளை நடத்துவதாகத் தெரியவில்லை. இது பற்றியே ஊழிய சங்கம் என்பது கிறிஸ்தவர்களின் கோட்டியெனக் கூறப்படுகின்றது. ஒடுக்கப்பட்டவர்களின் நட்ட நயங்களைப்பற்றிக் கவனமெடுப்பதற்கு ஒடுக்கப்பட்டவர்களுக்குள் 'யோவேல்' என்னுமொருவர் கறங்கெனச் சுழன்று திரிவது சந்தோஷமான காரியம். யோவேல் என்பவர் ஒடுக்கப்பட்டவர்களின் வேண்டுகோளின்படி அவர்கள் கருமங்களிற் பிரவேசிக்கிறாரா! அல்லது தாமாக அம்முயற்சியில் முயன்றுகொண்டாரா என்பது ஆராயவேண்டியது. ஒடுக்கப்பட்டவர்களில் ஒருவரிருவர் அவரைத் தமக்குத் தலைவராகத் தெரிந்திருக்கலாம். ஏனையர் அப்படிச் செய்யவில்லை. இதனை நல்ல தாயமெனக் கருதின யோவேல் என்பவர் தாம் ஒடுக்கப்பட்ட தமிழரின் தலைவரெனப் பிறர் நம்புமாறு பல சூழ்ச்சிகள் செய்துவருகின்றனர். கொழும்பில் இராசா என்பவர் தமது வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு வருகிறரெனப் புத்திஹீனமாக உதயதாரகையில் விளம்பரஞ்செய்து பின் இராசாவென்பவர் இவரெண்ணத்துக்கு இசையாமையைக் கண்டபோது அதைத் தமது ஆட்களுக்கு வேறுவகையாக விளங்கப்படுத்தினர். தமது கருமார்த்தமாகக் கொழும்புக்குப் போய்வந்து தாம் "எடியுக்கேசன் ஆபீசில் சமாசனத்தைக் குறித்து வித்தியாகர்த்தருடனும் கவுன்சிலிலும் பேசியதாகவுங்கூறிச் சனங்களை நம்பவைத்து வருகின்றார். கள்ளு வேணுமென்று அலுவல் பார்ப்பவர்களும் ஊழியசங்கத்தில் இருக்கின்றனர். மாகியப்பிட்டியில் இந்துக்களாயிருந்த ஒடுக்கப்பட்டவர்களில் ஆறேழு பேர்களைத் தமது மதத்திற்கு இழுத்துக்கொண்ட யோவேல் தன்னைத் திருநீறு பூசாத சைவன் என்று சொல்லிச் சனங்களை ஏமாற்றப் பார்க்கின்றர். இவர் செயல் உருத்திராக்கப் பூனையின் கதையை நினைப்பூட்டுகின்றது. கூட்டங் கூடுவதற்குப் பலமுறை முயன்றும் ஆட்கள் சேராமையால் கள்ளுக்கு ஓட்டுக் கொடுப்பதற்கென்று சனங்களைக் கூப்பிட்டுக் கூட்டம்வைத்திருக்கின்றனரோவெனக் கேள்வி? ஒடுக்கப்பட்ட ஊழியசங்கமென்பது எவ்விடங்களிலுமுள்ள ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் புரிகின்றது. யோவேலென்பவர் சங்கத்தின் லிகிதராயிருந்தும் கூடும் கூட்டங்களைப்பற்றிய விளம்பரங்களை எம்மவர்களுக்குள் பரப்பாதிருப்பதே தம் கருமமாக நினைத்திருக்கின்றர். இவர்கள் நடத்திய கூட்டங்களைப்பற்றிய விளம்பரங்களேதுவேனும் எப்போதாவது சுன்னாகத்தில் பரப்பப்பட்டதுண்டா?

யோவேல் என்பவர் எதற்காகப் பிரயாசப்படுகிறர்; தாம் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தலைவரெனப் பேர் எடுக்கவா? ஒருபோது முடவனின் ஆசைபோன்று இன்னும் சில எண்ணிப்போலும் தாம் கிறிஸ்தவராயிருப்பதனால் சைவர் தம்மில் விசுவாசம் வைக்கமாட்டாராதலினாலும் சைவராகக் காட்டிலும் கிறிஸ்தவர் தொகை மிகச் சிறிதாதலினாலும் எல்லவரையும் தமக்குத் துணையாக வைத்துக்கொண்டு மேல்பதவிகளுக்குக் கிட்டிவிடலாமென்பது மற்றொன்று.

இவ்வளவு காலமும் ஊழியசங்கமும் யோவேலும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் செய்த காரியமென்ன? ஒடுக்கப்பட்டவர்களை எவ்வகையில் தூக்கி விடுகிறார்கள்; இப்பொழுதும் கொழும்புத்துறைக் கிறிஸ்த பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறேமெனச் சொல்லியிருந்த சுன்னாகம் கிறிஸ்த பையனை அதிகாரிகள் சேர்க்கமுடியாதெனச் சொல்லிவிட்டனராம் இவர்களது கிளர்ச்சியால் ஏதும் முன்னேற்றம் வந்திருப்பதாகத் தெரியவில்லை. விழுகிற சுவரில் கையை வைத்தவன் கதைபோல ஒடுக்கப்பட்டவர்களின் நன்மைக்குரிய நிகழ்ச்சிகள் ஏதும் ஏற்படின் அவற்றையெல்லாம் தாமே செய்தாரமெனக் கதைகட்டி விடுகின்றனர்.

தமது சாதியாருக்குள்ளேயே ஏனையர் இவரைத் தின்பனவு உண்பனவுகளிற் கலவாது நீக்கிவைத்துச் சிறுமைபாராட்ட இவர் மற்றவர் எல்லாருக்கும் தலைவரா விரும்புவது புருகிந்திரியவதின் நோக்கம் யாதோ அறியேம்.

இன்னும்யோவேலென்பவரின் சுயநலங் கருதிய நடமாடுதலை விரிக்கின் அளவுகடந்து பெருகும். பத்திரிகையும் இடம்பெறாது. மேற்கூறியவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து நமக்காகப் பாடுபடுகிறேன் எனப் பறைபடித்துக்கொண்டு திரியும் யோவேலின் வலையிற் சிக்கிக்கொள்ளாமல் விழிப்பாக இருக்கவேண்டும்.

பெரும் போவதுடன் வாழையின் வளர்ச்சிக்குரிய திரவசத்து இல்லாமையால் அதின் குட்டிகள் நோய்வாய்ப்பட்டு அழிகின்றன. பூவின்மேல் மிகச்சொற்ப சதத்திற்கு ஆசைப்பட்டு பூவை முறிப்பதால் வாழைத்தோட்டக்காரர்கள் பெருங்கஷ்டத்தை யடைகிறார்கள் என்று ஓர் வாழைத்தோட்டக்காரர் கூறுகிறார்.
—"சோதிடபரிபாலினி"

இனம்! இனம்!!

அழகிய பாரிஸ்மாதரின் உயர்ந்த அசல் போட்டோக்கள் 24. அதை வைத்துக்கொள்ளும் ஆல்பம் புத்தகம் 1ம் (ஆனால் டி போட்டோக்கள் எவரால் அனுப்பும் ஆப்டோன் அச்சடித்த மட்டப்படங்கள் அல்ல, உயர்ந்த பிரிண்ட் மேக்.

பவுண்டன் பேனா.

இது பார்வைக்கு அழகாயும் எழுத்துவேலையில் முத்துக்களைப்போல் எழுதக்கூடியதும், அனேகர் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதுமான இப்பேனா ஒன்றோ இலவசமாய் கடைசித் தேதிக்குமுன் ஆர்டர் செய்வோருக்கு டி போட்டோக்கள் 24-ம் புத்தகம் 1-ம் இனாமாய் அனுப்புவோம். பேனா 1 க்கு விலை ரூ. 2-8 0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்:— பீ. ஜீ. சாமி& கம்பெனி
புக்செல்லர் அண்டு ஸ்டேஷனரி வியாபாரிகள்
பக்ராப்ட்ஸ் ரோட்டு
திருவல்லிக்கேணி, சென்னை.

நாற்பத்தெட்டு வினாக்கள்.

1. உனது விவாகச் செலவை எவ்வளவு சுருக்கத்தில் நடத்த உத்தேசம்? பணம், நகை இவைகளுக்கு ஏற்பாடு எப்படி?

2. உனது விவாக விருப்பம் எந்த நோக்கத்துடன்? உன்வித்தை, புத்தி, வாழ்க்கை இவைகட்கு ஒரு துணைவி வேண்டுமென்றா? அல்லது சமைத்துப்போட, சுவைக்க ஒரு பெண் வேண்டுமென்றா?

3. நீ விரும்பும்பெண்ணுக்கு முக அழகு வேண்டுமா, குண அழகுவேண்டுமா, விவாகத்திற்குப்பின் ஒன்று சேர்ந்திருக்கவா?- அல்லது தனியாகப் பிரிந்து விடவா?—எப்படி உன் உன் நோக்கம்?

4. விவாக ஆசை சரிதான்; அந்த ஆசைக்குமுன்பே நீ ஒரு ஜீவனார்த்தத்தைத் தேடிக்கொண்டிருக்கவேண்டுமே? அது கிடைத்தானதா?

5. விவாகச் சடங்கினது உடன்படிக்கைச் சத்தியங்களின் கருத்துக்களை நீ தெரிந்துகொண்டாயா? இப்படி ஒரு விவாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதின் பொருள் உன் மனதில் நன்கு பட்டதா?

6. விவாகஞ்செய்து கொண்டதில் உன் அனுபவங்கள் என்னென்ன, அந்த இன்பம் எத்தனை நாள் இனித்தது?

7. விவாகத்திற்குப் பிறகு உன்தாயார் உன்னை நடத்தும் விதம் எப்படி? உன் தாய் தந்தை தமயன்களுடன் நீ நடந்துகொள்ளும் போக்கு எப்படி? ஒட்டியா? விலகியா? பட்டும் படாமலா?

8. மாமியார்வீட்டு மரியாதை உனக்கு ஆரம்பத்தில் எப்படி? வரவரப் பிறகு எப்படி? எத்தனை தடவை மனஸ்தாபம்? மறுபடியும் கூட்டிக்கொண்டது எத்தனை தடவை?

9. குடும்ப ஒற்றுமை எப்படி? மனைவியுந் தாயும் எப்படி ஒழுங்குகெட்டிருந்தால் திருத்தும் வகையை எப்படித் தீர்மானிக்கிறாய்?

10. நீ இப்பொழுது உன் கல்யாண வாழ்வில் எத்தனையாவது படிக்கு வந்திருக்கிறாய்? இதற்கிடையில் கலியாண சுகத்தில் வெறுப்புத் தட்டும்படியான துயர்மிகு கண்ணீர்கள் எத்தனைமுறை சொரிய வாய்த்தன.

11. வாழ்க்கையில் உன் இன்பத்திற்கு இடையூறாய் இருப்பவையெவை?

12. கடன்தொல்லை உண்டா? எவ்விதங் கடனாளியானாய்? அதைத் தீர்க்க நீ நினைக்கும்வழி கூடிவரக் கூடியதுதானா? அதில் தடைகள் ஏதேனும் உண்டா?

13. குடும்பத்தினின்றும் பிரிந்து போகிற விருப்பம் உனக்கா, உன் மனைவிக்கா? இந்த எண்ணம் விவாகத்திற்கு முன்பேயா? பின்னரா?

14. வேறு குடித்தனத்திற்குப் புறப்பட்டுவிட்டாயே, ஒன்றாய் வாழ்ந்ததில் கண்ட இன்பம் இதிலிருக்கிறதா? இப்போது உனக்கு ஊரின்மதிப்பு பலம் எப்படி?

15. வேறாகப் பிரிந்ததில் உன் குடும்பச் செலவு குறைந்திருக்கிறதென்று பூரிக்கிறாயா? ஒன்றாயிருந்தபோது சீ, தோ, என்று கேவலப்பட்ட நீ இப்போது ஒருமதிப்பில் உயர்ந்திருப்பதாய்த் தோன்றுகிறதா?

16. உன்னையும் உன் மனைவியையும் தூற்றுகிறவர்களுக்கு அவர்களின் வாயை மூட என்ன வழி தேடியிருக்கிறாய்?

17. உனக்குப் பிரீதி உத்தியோகமா?—வர்த்தகமா? பிறருக்கு அடங்கிச் சம்பாதிக்க எண்ணமா, அல்லது சுயேச்சையாய்ப் பிழைக்க வேண்டுமென்ற ஆவலா?

18. நீ இப்போதுள்ள வேலையில் திருப்திப்படாவிட்டால் வேறு எந்தவேலையில் நாட்டங் கொண்டிருக்கிறாய்? எதிலிருந்து உன் வாழ்நாளை கழிக்க உத்தேசம்?

19. உன் மாதச்செலவு உன் வருமானத்திற்குள் அடங்கியிருக்கிறதா? மேலுக்கு எவ்வளவு மிச்சப்படுகிறது?

20. எத்தனை தடவை சேர்த்து வைத்ததிலிருந்து எடுத்துச் செலவிட்டு விட்டாய், எண்ணிச்சொல்லு, சில்லறைச் செலவுகளின் மொத்தக்கணக்கைக் கூட்டிப் பார்த்தாயா? சுருக்கயோசனை உண்டா?

21 உன்வேலையென்றால் ஒருபுது அக்கறை உன்வேலைக்காரன் வேலை என்றால் அதை

கெதுவாப் பின்றைக்குச் செய்ய நினைத்தல் இப்படிப் பிறர் நினைவு மித்திரியாகக் கொண்ணுகிறாயா?

22. குடிவெறிக்கும், விபசார தோஷத்துக்கும், கெட்ட சுப்பாசங்கட்கும் உன் நேசன் தப்பிப் பிழைத்து விட்டதா? அவைகளை அவற்றிலே தவழ்ப்பட்டு மயக்கி விட்டாயா, என்னென்ன துர்ப்பழக்கங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறாய்?

23. உன்னிடம் நெருங்கிப்பேசும் ஒவ்வொருவர் குணத்தையும், தன்மையையும் சுயாசப் பேச்சான தன்காரியத் தன்மையையும் செம்மையாய் அறிந்து மனதில் வைத்திருக்கிறாயா? அதில் உத்தமர்களின் தொகை அதிகமா? அதமர்களின் தொகை அதிகமா? எவரெவர் உன் ஆபத்துக்கு உதவக்கூடியவர்கள்? அதை அறிந்து தெரிந்திருக்கிறாயா?

24. உன்வேடிக்கை விருந்தாசன்பர்கள் உனக்குச் செய்த செலவு எவ்வளவு? நீ அவர்களுக்காக நாசம்செய்த குடும்பச் சொத்து எவ்வளவு?

25. நீ வெளியிற்சென்று கண்டுபேசும் மனிதர்களில் எவரெவர் உன் அவசரத்துக்கு உதவக் கூடியவர்கள்? அவர்களின் யோக்கிய அயோக்கிய தாரதம்மியம் தெரிந்து வைத்திருக்கிறாயா?

26. எத்தனிதமான குடும்ப கலகங்களிலும் சோதனைகளிலும் தன்மனத்துயரத்தைப் புக விடாமல் இருக்கப்பக்குவம் பெற்றிருக்கிறாயா? அவ்வாறு இருக்கப் பிரயத்தனம் பண்ணுவதில் உன் வெற்றியை எத்தனை தடவைகளில் கண்டிருக்கிறாய்?

27. ஒரு தினப்பொழுதில் சந்தோஷம் துயரம் கோபம் இவற்றை எத்தனை முறைகொண்டாயென்று இரவில் சிந்தித்திருக்கின்றாயா?

28. நடக்கத்தவறியதில் மனதைச்செலுத்தி நாளெல்லாம் வருந்தி நீ வாரிக்கொண்ட லாபம் என்ன? மேல் நடக்கவேண்டியதில் உன்கருத்தை எப்போது செலுத்தப்போகிறாய்?

29. உனக்குக்கிட்டாததை நினைத்துக்கொட்டாவி விட்டு லாபமென்ன, சென்றது கருதிவன் சிந்தையேனோ? உன்னைக்கொண்டு பிரித்திடாததேனு?

30. உன்மனதுக்குப் பிடிக்காத ஒரு தொழிலையோ உத்தியோகத்தையோ விடுத்து உன் மனம் ஏற்கும் தொழிலில் நீ இறங்குவதற்கு வசதி எப்போது கிடைக்கும்? காலம் சரியில்லையெனில் நல்லகாலம் வருவது என்றைக்கென உனக்குத் தெரியுமா?

31. நீ அயோக்கியர்களைச் சந்திக்க நேர்ந்தால் எவ்வாறு எவ்வளவு நேரம் வார்த்தையாடுவாய்? யோக்கியர்களிடம் உன் குலாவுவகை எப்படி?

32. ஒழிந்த நேரங்களை எவ்வெவ்வாறு செலவிட வேண்டுமென்று உன் அநுபவத்தில் கண்டதைச் சற்றே விவரி?

33. உன் தூரப் பிரயாசங்களுக்குக் குருநாதர்களாயிருந்தவர் எவரெவர்?

34. நீ சம் நாட்டு ஆசாரத்தை ஏற்கிறாயா? பிறநாட்டு ஆசாரத்தை ஏற்கிறாயா? இரண்டில் நீ விரும்புவது எது?

35. வழ்மையில் சேர்த்த நண்பனை உன் தற்கால உயரிய நிலையில் நீ எவ்வாறு வரவேற்பாய் ஒட்டியா, விலகியா?

36. எளிய கலப் புசிப்பிலுள்ள ஆரோக்கியமும் திருப்தியும் உயரிய ஆகாராதிகளில் காண முடியுமா?

37. நீ பிறருக்கு நலம் செய்தது எத்தனை தடவை, தின்மை புரிந்தது எத்தனைமுறை, உன்னுல் துயருற்றோரின் தொகை எவ்வளவு?

38. உனக்கு விரோதிகள் உண்டா, எதிலிருந்து இப்பகைமையின் விளைவு, அவர்களுடன் உறவாட எண்ணமுண்டா, சாகும் வரையில் பகைமையே சாதிக்க நினைவா?

39. உனது விரோதமும், பகைமையும் நீங்கி வாழ்ந்திருக்க நீ முயன்றதில் நீ பெற்ற வெற்றி எதுவரையில்?

40. உன்னிடமுள்ள புஸ்தகங்களுக்குக் கணக்கு வைத்திருக்கிறாயா, இரவலில் தொலைத்தது எத்தனை?

41. நீ வாசித்த நூல்களில் எத்தனை பாகங்கள் இப்போது உன் நினைவில் உள்ளன, மறந்ததைத் திருப்பிப் படிக்க உனக்கு சாவகாசம் எப்போது?

42 நீ எழுதும் டைரியில் பிறர்மேல் கூறும் குறைகளுடன் நீ செய்த நேரிட்ட பிழைகளையும் குறிப்பிட்டு வருகிறாயா?

43. உன் மனதில் ரகசியங்களை வெளியிடத் தகுந்த அந்தரங்கமானவர்களை நீ பெற்றவனாயா? அன்றேல் எவரெவர், உன் ரகசியங்களை வெளியிட்டு விட்டோரின் எண்ணிக்கை எத்தனை கோடி?

44. உன் உபாசனைக்கு நான்கு குழந்தைகளெனில், எத்தனை இரவுகளில் நீ உன்மனைவியைத் தனியே கதறவிட்டுச் சென்றிருக்க வேண்டும்?

45. சிலர் சஞ்சலத்தையே தங்கள் மனதில் குடியிருக்க அநுமதித்திருக்கின்றார்களே அதில் நீயும் ஒருவனு?

46. நீ எவரிடத்தில் மற்றவரைவிட அதிக அன்பைப் பெறுகிறாய்?

47. பிற்காலத்துக்கு உதவ ஏதாவது பணம் சேர்த்து வைத்திருக்கிறாயா? எவ்வளவு அப்பா.

48. நீ பிரதிதினமும் கடவுளை எத்தனை முறை நினைக்கிறாய், மறக்கிறாய், மாதத்தில் எத்தனை முறை கோவிலுக்குச் செல்வாய்?

(அயர்ந்த குணபோதினி.)

மாதரின் மதியற்ற போதனை.

அன்பிற்குடையீர்!

ஆதியந்தமில்லாத சுப்பரன், அண்டபிண்டம் முதலாகிய சராசரங்கள் யாவையு முண்டாக்குங்போது மானிட வர்க்கத்தையு முண்டாக்கினர். அதில், ஆடவனை முன் படைத்து அன்னவன் சொற்கீழ்ப்படிந்து தொண்டு புரியுமாறு ஓர் துணை வேண்டுமெனக்கருதிப் பெண்ணைப் படைத்தார் என்பது சகலமத கோட்பாட்டிலும் தெட்டத்தெளிவா யறியக்கிடக்கு மோர் பெருங்கொள்கை. அக்காலந்தொட்டு இக்காலமட்டாய் ஆடவரின் சொற்கீழ்ப் படிந்த பெண்கள் ஒழுகிவந்தார்களென்பது யாவரும் அறிந்தவோர் விஷயம். இங்ஙனம் புருஷன் சொற்கமைந்து நடக்கும் மாதரைப் பதிவிரதாஸ்திரீகளென்றும், அமையாது வாழும் மாதரைப் பரத்தையர், தாசிகள், சண்டாளிகள் முதலிய இழிமொழிகளாற் பலரு மழைப்பர். நிற்க, மேலைத்தேசங்களிலுள்ள மாதரிற் சிலர், கல்வியைக் கற்றுச் சகல சாதனைகளிலும் ஆடவரைப்போல் நடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என அறிந்த எம்பரதகண்டத்திலுள்ள மாதரிற் சிலரும், அன்னவர்களைப் போலாக முயன்று கொடுக்குக்கட்டி நாட்டியமாட வெளிப்பட்டவர்போல், பத்திரிகைகளிலும் கடிதங்கள்மூலமாகவும் நேர்முகமாகவும் நின்று வார்த்தையாடுவதா லறியக்கிடக்கின்றது. இம்மாதர் மேலைத்தேசத்தவர்போல் ஒவ்வோர் நூதனமுறைகளைக் கையாளுவதால், எம்நாட்டிலும் நிர்வாணசங்கத்தை ஏற்படுத்திப் போடுவார்களோ என்னவோ எனக் கலங்க வேண்டியிருக்கின்றது. அந்தோ! சீ, பெரும் வெட்கக்கேடா யிருக்கின்றதே. கற்பினுற் சிறந்த மாதரும், புருஷன்சொற்கமைந்து நடந்த புண்ணியவதிகளாகிய அருந்ததி, சீதை, கண்ணகை முதலியோர் பிறந்து வாழ்ந்தது இப்பரதகண்டத்திலன்றோ. 'சீதேவியார் பிறந்த திருப்பாற்கடலிலே மூதேவியும் பிறந்தாள்மன்?'' என்றபான்மையாய், கற்புநஸ்திரீகள் பிறந்த இக்கண்டத்திலே இக்கணிகையரேன் பிறந்தார்களோ வறியேம். இம்மூடச் சிறுக்கிகள், தங்களைக் கண்டதும் சத்தம் மணவாளர் முதலிய ஆடவர் எழுந்திருக்கவில்லையென்றும் மரியாதையாக வார்த்தையாடவில்லையென்றும் பிதற்றுகின்றார்களே! ஆகா! அடுப்பூதிகட் குறுமாண்மை யிருந்தால், விசைபுள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்கட்கு எவ்வித ஆண்மை யிருக்குமென்பதை இவர்களறியாதிருப்பது பெரும்பேதமையே! இப்பேதையர், தங்களது கல்வியின் திறத்தை யறியாது, பெற்றோர் கல்வியறிவற்றவர்க்கும் காவாலிகட்கும் தேடி மன்றல் செய்துவைக்கின்றார்களே எனச் சொல்லிக் குரைக்கின்றார்கள். இவர்களறியாமையென்னே! ஓர் மணமுகூர்த்தத்தையிட்டு,

"பெண்ணுக்குவுக்காலைமாதாவிரும்பும்வித்தையே
பெண்ணில் தனம்விரும்பு மீன்றதாய் — நண்
ணிடையில், கூரியசுற்றங்குலம்விரும்பும்நாத
னது, பேரழகுதான் விரும்பும் பெண்".

என்ற எம்முதாட்டியார் பாடலை இப்பெண்கள் அறியார்களா? அறிந்திருப்பார்களாயின், தங்கள் கல்வித்திறத்தால் மனதிற்கேற்ற மணனைத் தேடிக்கொள்ளலாகுமே! "ஓடவும் மாட்டேன் பிடியுங்கொடேன்" என்றவன் பான்மையாய், பொம்மைகள்போலிருந்து, பிதா மாதாக்களால் தேடிய வொருவனை மணந்துகொண்டபின், அநியாயமாக, ஐயோ! இவன் யார்? இடிபடிபன்போல் வந்திருந்து என்னை வருத்துகின்றானே எனப் பறையடித்துப் புருஷனைத் தூற்றி நலகிடும் பாதகப் பெண்களின் மேட்டிமைதானென்னே! "கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்" என்னும் முதுமொழியைத்தானு மிவர்கள் அறியவில்லைப்போலும். "எண்ணற் கற்று எழுத்தறவாசித்தாலும் பெண்புத்தி பேப்புத்தி" என்னுங் கவிஞரின் திருமொழியும் பொய்யல்ல, இம்மூடத்தமாக்கள் படித்த கல்வியேதுக்காக? காதற்கடிதமெழுதவும், புருஷனைத் தூற்றவும், குடித்தனப் பிளவையுண்டாக்கவும், வீண்மமதைகொண்டு எளிய மாதர்க்கும் சிறுபாலியர்க்கும் தங்கள் கெட்ட நடத்தைகளையுந் துர்ப்போதனைகளையுமெடுத்தோதி, அன்னவர்களையுந் தங்களைப்போலாக்கவோ? அந்தோ! இவர்களைத்தான் பிலத்திலதிகாரிகளெனக்கூறவேண்டும். சிற்சில புருஷர் தங்களை அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், என ஓலமிடுகின்றனர். இவர்களைக் கற்பாஸ்திரிகளெனச் சொல்வதற்கு இடமுண்டா? அக்காலத்தில் வாழ்ந்த கற்புள்ள மங்கையர் தங்களைப் புருஷர் கையாலடித்தால் உடனே நாதா! உங்கள் கைநோகுமே! எனப் பற்றி முத்தமிடுவாரும், காலாலுதைத்தால் ஐயோ நாதா! நிலத்தில் மிதிக்காமல் பாதம் நோகப்போகின்றதுவே! எனப் பரபரப்புடன் பற்றி முத்தமிடுவாரும் வாழ்ந்த நாடு இதுவன்றோ! இன்றும் தற்காலத்தில் ஸ்ரீ எல் வாசன், என்பவர் எழுதிய "இல்வாழ்க்கையின் இரகசியம்" என்ற புஸ்தகத்தில், ஓர் பெண்ணு தனது தன்னைப் புருஷன் அடிக்கிறாரில்லையே, ஆதலால் அவருக்கென்மீது பட்சமில்லை என ஓர் டாக்டரிடம் முறையிட்டதாகவும்; இன்னோர் பெண்ணுயவள் தன்னைப் புருஷன் கண்டிப்பதில்லையென வருந்தித் தன்னையே தான் கடிந்தும் அடித்தும் தனது தன்பத்திற்குள்ளானதுமன்றி, தனக்கேற்ற புருஷன் வாய்க்கவில்லையெனத் துக்கப்பட்டதாகவும்; இவ்விதமே இன்னுமெத்தனையோ மாதர் செய்துகொண்டதைத் தமது ஆராய்ச்சியால் அறிந்துகொண்டதா யெழுதுகின்றார். இதனால் குடித்தனம் பிளவுபடாது இன்பமாய் வாழவேண்டில், பெண்களுக்கு அடிக்கவேண்டுமென்பது இக்கதைகளாற் புலப்படுகின்றதல்லவா? ஆதலால் மேற்கூறிய பெண்களையோ! எம் நாட்டில் மேட்டிமை யுற்றுக் கொடுக்குக்கட்டிய பெண்களையோ புருஷன்சொற்கேட் டடங்கிநடக்கத் தகுந்தவர்களென்றுங் கற்புள்ளவர்களென்றுங் கூறுவோம். நிற்க, இக்கொடிய துஷ்டிகள் ஏராத வழிமுறைகளைக் கையாண்டு நடந்தால் ஆடவரென்செய்வர். நம்முதாட்டியார் சொன்ன பான்மையாய்,

"பத்தாவிற்கேற்ற பதிவிரதை புண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக நடப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்."

என்ற பாடலைக் கடைப்பிடியாய்ப் பிடித்து நடக்கவோ! என்றால், பாவம் எனது பிள்ளைகள் கஷ்டப்படுவார்களே என நினைத்து, எதுவிதத்தாலும் பெண்களைத் திருத்தலாமென்ற எண்ணத்தால் தங்குமாடவருமுளர். இவ்விரகசியத்தை யறியாத மூடமாதர் "குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்னுந் திருவாக்கை மறந்து, தத்தம் புருஷரிற் பிழையைச் சாற்றி, இத்தடிமாடுகளைச் செல்லென்றாலுஞ் செல்லுகின்றனரில்லையே சும்மாயிருந்து எம்மை வருத்துகின்றனரே எனத் தூற்றி வீண் கலம்பகத்தைக் கிளப்பிவிடுகின்றனர். "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்கின்றார்களே! அதுமட்டோ! புருஷரோடு எதிர்த்துப்பேசவும், பிறர்க்கெடுத்தோதவும், இழிய வார்த்தைகளால் வையவுந் தொடங்கிய இப்பாத்தையர், கூசாது வைநீட்டவும் பின்னிற்பார்களா? "பெண்ணிற்கழ கெதிர்பேசாதிருத்தல்" என்பதைத்தானும் இப்படித்த சிரோன்மணிகள் காணவில்லையா?

"நுண்ணறிவுடையோர் நூலொடுபழகினும்
பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே"

இவ்விதமான எளிய குணமுற்ற மாதரை "அடியாத மாடு படியாது" என்பதால், அடியாலுமிடியாலு முதையாலு மடக்கவேண்டியதே ஆடவர் கடன் என முதியோர் கூறுவர். கல்வியிற் சிறந்தோமெனப் பத்திரிகைகள் மூலங் கூறப் புறப்பட்ட இம்மாதர், மேற்கூறிவந்த குணங்களைக் கொடுக்குங் கல்வியைக் கற்றவர்களேயன்றி, இல்வாழ்க்கைக் குகந்த கல்வியைக் கற்றுக்கொள்ளவில்லை யென்பது விளங்கக்கிடக்கின்றது. ஆகையால், ஆடவரைத் தூற்றும் இம்மாதர்க்கு நேரிடுங் கஷ்டங்களில், முதியோர் கூறியவற்றிற் சிலவற்றை ஈங்கு குறிப்பிடுவேன்.

"எதிபெண்றெதிர் நிற்பாள் கூற்றஞ்சிறகாலே,
அட்டிற்புகாதாளரும்பிணி—அட்டதனை
உண்டு புதவாளில்வாழ்பே யிம் மூவர்
கொண்டானைக் கொல்லும் படை."

என்றும், மேலுங் கணவனைக் கோபித்து உக்கிரமாய்ப் பார்த்தவள் வேங்கைப் புலியாவாள்; வைதவள் கொள்ளிவாய்ப் பிசாசாவாள்; அவனைக்கண்டு எழுந்திராமற் கிடந்தவள் மலைப்பாம்பாவாள், என்றுங் கூறப்பட்டிருக்கின்றதே! இவற்றினை யெல்லா மிச் சிரோன்மணிகள் படித்துக் கொள்ளவில்லைப் போலும். பின்னும் இப்பேதையர், வீட்டுப் பொருட்களை, அக்கம் பக்கமுள்ளவர்க்கு அள்ளிக்கொடுத்தால், வீட்டில் உண்ணவுடுக்க ஒன்றுமில்லையே யென்றெண்ணிப் பாவிதொலைந்து விடுவான், என்ற எண்ணத்தோடு, வீணே பொருட்களை அள்ளியிறைக்கும், மாதரிலநேகரைக் கண்முன்பாய்க் கண்டிருக்கின்றோம். இதைக் கண்டிக்க ஆடவர் புகுந்தால், ஐயோ! முறையோ! நெறியோ! என்னைப் பெற்றதாய்தந்தையர்க்கு ஒன்றும் கொடுக்க வேண்டாமென்கின்றானே! பாவி! இச் சண்டாளன் தொலைவது எப்போது! எனப் பலருமறியக் குரைத்திடும் கண்களிலுங் கெடுகெட்ட இத் தோஷையரை உத்தமமாதரெனச் சொல்ல முடியுமா? அக்காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவநாயனாரின் தேவி, புருஷனையே தெய்வமென வணங்கி வந்ததால், அவரருளிய புதுமைகளை நூல்களில் வாசித்தறிகின்றோம். இது கருதியன்றோ, எம் நாயனாரும்,

"தெய்வந்தொழா அள்கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

என்றார். இக்காலத்துற்ற அநாகரீக கோலம் பூண்டமாதர், கடவுளை வணங்கக் கோவிலுக்குச் செல்லுகின்றோம், எனச் சென்று எவ்வாடவன் நன்கு உடையணிந்து வருகின்றான், எவன் அழகுள்ளவன், எனப் பார்ப்பாரும், எப்பெண் பெரியதாலி கட்டி வருகின்றாள், எவள் பணுதிச்சேலை உடுத்தி அங்கி நவ்க்கை போட்டிருக்கின்றாள் என்றும், இன்னுமிவ்விதமே அநேக விபரீதங்களையும் பார்த்துத் திரும்புகின்றனரேயன்றி, கடவுளை வணங்குவார் புருஷரையுமிப் பெண்கள்தாளு? இப்பற்றை யறிந்த புருஷர் கோவிலுக்குப் போவதைத் தடையுக்குச் சென்றால், குய்யோ! முறையோ! எனக் கூக்குரலிடுகின்றனர். சீச்சீ, இக்கூடுகெட்ட பெண்களோடு வாழ்வதிலும், வேறுபட்டிருப்பது மிகவு நன்மை. இத் தூர்த்தரிகள் எத்தனையோ ஆடவரைக் "கள்ளுண் வெருட்டி, மூலைபால் மயக்கி, தம்மிடத்தே இழுத்துக் கொண்டபின் ஓட்டைக் கையிற் கொடுக்கின்றனர். ஆடவரை மேற்சொன்ன என்னுகின்றனர். இவ்விதமான (கடவுளின் கட்டளைக்கும் யின்றிய) பெண்கள், எம் நாட்டிலிருந்தால், மழை வருவதெப்படி? பஞ்சமகல்வதெப்படி? தற்காலத்தில், மேற்கூறிய கணிகையாது என்னத்தை உற்று நோக்குங்கால், ஆடவர் தங்களை மேன்மைப்படுத்த வேண்டு மெனபதுவே யாக்கும். அப்படியாயின் திருவள்ளுவநாயனார் தந்த திருக்குறளை மறக்குறனாக "தெய்வந் தொழா ளாருமவன் தன் பெண்ணைத்தொழுதெழுந்தாற் பெய்யெனப் பெய்யும் மழை." என்று வண்ண மன்றே பாட வேண்டும். அப்படியாயின் உலகம் பொறுக்குமா? எழுத்ததைக் கடுங்குகின்றதே; கேடு! கேடு! பெருங்கேடு! நம் நாட்டிற் றலைகாட்டிக்கொண்டது. இனி இப்பரதகண்ட மழிவதற்குக் காலம் நெருங்கிவிட்டதுபோலும். இவ்விதமே இக்கெடுகெட்ட மாதரின் மதியற்ற போதனைகளை நம் நாட்டிற் கற்புற்ற மங்கையர் கேட்டும் பார்த்தும் நடவாதிருப்பார்களாக. நிற்க, அன்பார்ந்த சகோதர வாலிபரே! நீங்கள் யாவரு மொருங்குசேர்ந்து யான் மேலே குறித்த குணங்களுள்ள மாதரை யரிப்பதென்றி மேற்கூறிய குணங்களுள்ள மாதரை வர்த்து அன்னவர்களுடன் கூடி வாழாது யோசித்து நடக்குமாறு உங்களைப் பன்முறையும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். (வரும்).

ஈழநகரின் பிரஜை.

விசேஷ அறிவிப்பு.

பிராண்டு, விஸ்கிரூத், பீடில், ஆர்மோனியம், கிறமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்குத் தேவையான சகல சாமான்களும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

எஸ். கே. லோட்டன் அன்டு கோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க. லோட்டன் காலந்தொடங்கி நாங்கள் புகைப் படம் எடுத்துவருகின்றோம். உங்களுக்கு உங்களைப்போலக் காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் படமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் "கார்ட்டு" எழுதி அறிந்து கொள்ளவும்.

மனேஜர்,
எஸ் கே. லோட்டன் அன்டு கோ.

ஓறியன்றல் ஸ்ரோர்ஸ்,

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதரவியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரசாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் தொழிலில் செய்வித்து யாவரும் விரும்பும்படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம். ஒருமுறை வந்து பாருங்கள்.

வ. அ. துரையப்பா,
சொந்தக்காரர்.

தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

இப் புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூட புத்தகங்களும், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய மற்றுஞ் சகலசாமான்களும், "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும், ஆசிரியர் பிரவேசபரீட்சை, இரண்டாம் மூன்றாம் தராதரப் பத்திரம்பெறுவோர்க்குரிய புத்தகங்களும், இதர நூல்களும் கிடைக்கும். வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

தனலட்சுமி புத்தகசாலை,
சுன்னாகம்

யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ்.

(பொன்னுசாமி ஷாப்)

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டினத்திற்குச் சாமான் வாங்க வந்தால் பிறகடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும், எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஸ்டுகள் சால்வைகள் ஷர்ட்டுகள் மற்றுமுள்ள எல்லா ஷாப்புச் சாமான்களும் நேரிலும் பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துவகைகளும், எங்கள் மருந்து ஷாப்புப் பிரிவில், நற்சாட்சிப்பத்திரம் பெற்ற ஆட்களைக் கொண்டு, மிக சாமமாயும் சுணக்கமின்றியும் தயாரித்துக் கொடுக்கப்படும். சகலவிதப் பேட்டண்ட் மருந்துகளும் கிடைக்கும்.

D. S Ponnusamy,
Proprietor & Manager.

Printed by V. M. Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & published at the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.

V. M. Kandiah